# நட்சத்திர முன்னேற்றக் கழக கொள்கை கோட்பாடுகள்

மேலும் இதிலே உங்கள் நட்சத்திரம் எந்த வழிபாடுக்கு ஏற்புடையது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

- மாதம் ஒருமுறை நட்சத்திரத்திற்காக சுய ஆற்றலுக்காக ஆத்ம சக்திக்காக, சுய மரியாதைக்காக ஒருநாள் ஒதுக்கிவிட்டு அறிவியல் பூர்வமான ஆற்றலை சூரியன், சந்திரன், நட்சத்திரம் ஒரு நேர்கோட்டில் இருக்கும் போது வருகின்ற ஆற்றல் அனைத்தும் உங்களுக்கே சொந்தம். எனவே அதை உபவாசமிருந்து அனுபவியுங்கள். அந்த அற்புத சக்தியை உள்வாங்குங்கள்.

- இந்த நட்சத்திர அம்சத்தை வழிபாடுகள் வாயிலாக அமல்படுத்தும்போது நீங்கள் கணபதியை வணங்குபவராக இருந்தால், சங்கடஹரசதுர்த்தி அன்று உங்கள் கூட்டு வழிபாட்டை வெற்றி ஆக்குங்கள்.

- நீங்கள் குருவினை வழிபடுவதாக இருந்தால் சஷ்டியை கூட்டு வழிபாட்டில் காணுங்கள்.

- நீங்கள் நாராயணனை வழிபடுவதாக இருந்தால் ஏகாதசி அன்று விஷ்ணு சஹஸ்ரநாமத்தை அரங்கேற்றுங்கள்.

- நீங்கள் சிவனை வழிபடுவதாக இருந்தால் சிவராத்திரி முழுவதும் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம்.

- நீங்கள் சக்தியை வழிபடுவதாக இருந்தால் தசமி அன்று புதிய முயற்சிகளை தொடங்குங்கள்.

- நீங்கள் உங்களையே வழிபடுவதாக இருந்தால் சப்தமி அன்று மன இருளை நீக்கி பேரின்பம் காணுங்கள்.

- இதையும் தாண்டி அமாவாசை, பௌர்ணமி, தேய்பிறை அஷ்டமி இந்த நாட்களில் பொது இடங்களில் மூதாதையர்களுக்காக அமாவாசையிலும், அனைத்து மக்களுக்காக பௌர்ணமியிலும், ஆதிகுரு வழிபாட்டிற்காக, மூத்த குடிமக்களுக்காக பைரவர் வழிபாட்டை தேய்பிறை அஷ்டமியிலும் ஒருங்கிணைத்த இன்பம் காணுங்கள்.

- நட்சத்திர முன்னேற்றக் கழகம் கொள்கை அறிக்கை நோக்கங்கள் காணவும். தங்களது வாக்காளர் அடையாள அட்டை நகலை வாட்ஸ் அப் - ல் அனுப்பி பொதுவாழ்வில் ஆனந்தம் ஆன்மீகம் காண்போம்.